# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய மற்றும் மாநில அரசு மானியத்துடன் பிரதமமந்திரிபயிர் காப்பீட்டுத் திட்டம் 2017-18ம் ஆண்டு காரீப் பருவத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. தற்போது செயல்படுத்தப்படவுள்ள பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விதைக்க இயலாமை,விதைப்பு பொய்த்தல் மற்றும் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகள் போன்ற அனைத்து இனங்களுக்கும் பயிர் காப்பீடு பெறவழிவகை செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் தற்சமயம் காரீப் பருவத்தில் நிலக்கடலை,உளுந்து மற்றும் துவரை பயிர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படஉள்ளது. இத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் கிராமங்களைச் சார்ந்த அனைத்துவிவசாயிகளும் பயிர் கடன் பெறும் போதுகட்டாயமாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள். பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் தங்களது விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேரலாம். இப்பயிர்களுக்கு காரீப் பருவத்திற்கு 2.0% காப்பீட்டுத் தொகையில் பிரிமீயமாக செலுத்தவேண்டும். வருடாந்திர வணிக,தோட்டக்கலை பயிர்களான வாழை, மரவள்ளி, வெங்காயம் மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களுக்கு 5%பிரீமியம் செலுத்தவேண்டும். அதன்படி, கீழ்க்கண்டவாறு உரியகாலத்தில் காப்பீடு தொகை செலுத்தவேண்டும்.

| வ. எண். | பயிர் | பருவம் | ஏக்கருக்கு செலுத்த வேண்டிய பிரீமியத் தொகைரூ. | விதைப்புபொய்த்துபோதல் (preventing sowing/ Planting) | பயிர் வளர்ச்சிபொய்த்துபோதல் (Failed sowing) | அறுவடைக்கு பிந்தைய இழப்பு(Post Harvest Loss) |
|---|---|---|---|---|---|---|
| 1. | உளுந்து | காரீப் | 200 | 15 - ஜுலை | 15 - ஆகஸ்ட் | 15 - அக்டோபர் |
| 2. | துவரை | காரீப் | 200 | 15 - ஜுலை | 15 - ஆகஸ்ட் | 15 - ஜனவரி |
| 3. | நிலக்கடலை | காரீப் | 340 | 15 - ஜுலை | 15 - ஆகஸ்ட் | 15 -நவம்பர் |
| 4. | வாழை | காரீப் | 2535 | 15 - ஜுலை | 10 -செப்டம்பர் | 10 - டிசம்பர் |
| 5. | மரவள்ளி | காரீப் | 1150 | 15 - ஜுலை | 10 - செப்டம்பர் | 10 - டிசம்பர் |
| 6. | வெங்காயம் | காரீப் | 1425 | 10 - ஜுலை | 10 - ஆகஸ்ட | 20 -நவம்பர் |
| 7. | மஞ்சள் | காரீப் | 2750 | 15 - ஜுலை | 10 - செப்டம்பர் | 10 - டிசம்பர் |

கரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்திட அக்ரிகல்சர் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியாலிட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வேளாண் பயிர்களுக்கு 15.08.2017வரையும், தோட்டக்கலைபயிர்களுக்கு 15.09.2017வரைவிவசாயிகள் பிரீமியத்தை செலுத்திதங்களை இணைத்துக் கொள்ளலாம்.

பிரீமியத்தை தேசியமயமாக்கப்பட்ட வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் காப்பீடு நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலமும் செலுத்தலாம். மேலும்,

விவரங்களுக்கு தங்கள் பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மைஉதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகவும், இந்திய வேளாண் காப்பீட்டுநிறுவனம் கட்டணமில்லா தொலைபேசிஎண். 18001036565லும் தொடர்பு கொண்டுவிவரம் பெறலாம் பாரதபிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பங்குபெற்று பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் (முகூபொ) அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்டஆட்சித் தலைவர் (முகூபொ)
கரூர்.